மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூர் அருகில் உள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கத்திலிருந்து டால்மியா சிமெண்ட் ஆலைக்கு சுண்ணாம்புக்கல் விநியோகம், துணை குத்தகைதாரர்களான திருவாளர்கள் பிக்ஸட் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் மூலம் நடைபெறுகிறது.

(ஆ) திருவாளர்கள் பிக்ஸட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 1—12—1975 முதல் 7—9—1985 முடிய பத்தாண்டுகளுக்கு பெரியநாகலூர் கிராமத்தில் சுண்ணாம்புக்கல் உள்ள பரப்பளவு (172·99ஏக்கர்) பகுதியும் மற்றும் 1—12—1975 முதல் 2—10—1990 முடிய பதினைந்து ஆண்டுகளுக்கு அமீனாபாத், கைருலாபாத் கிராமங்களில் சுண்ணாம்புக்கல் உள்ள பரப்பளவு (235·58) ஏக்கர் பகுதியும் சுண்ணாம்புக்கல் விநியோகம் செய்வதற்கு துணை சுரங்கக் குத்தகை வழங்கப்பட்டுள்ளது.

*வினா எண். 704—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களிலிருந்து சுண்ணாம்புக்கற்கள் எடுத்த வகையில் அரசுக்கு டால்மியாபுரம் சிமெண்ட் ஆலை நிர்வாகம் தர வேண்டிய உரிமத்தொகை (Lease Amount) பாக்கி எவ்வளவு?

(ஆ) அந்த தொகையை அரசு வசூலிக்க எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) எந்த ஆண்டிலிருந்து இந்தத தொகை பாக்கி உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களிலிருந்து சுண்ணாம்புக்கற்கள் எடுத்த வகையில் அரசுக்கு டால்மியாபுரம் சிமெண்ட் ஆலை நிர்வாகம் 30—6—1980 உடன் முடிந்த அரை ஆண்டு வரை ரூ. 2,24,092.75 பாக்கியாக உள்ளது.

(ஆ) இந்தத் தொகை வசூலிப்பது சம்பந்தமாக ஆலை நிர்வாகத்தினால் திருச்சி துணை நீதிமன்றத்தில் 1978-ல் வழக்கு ஒன்று தொடரப்பட்டது. மேற்படி வழக்கில் ஆலை நிர்வாகத்தினருக்கு சாதகமாக 24—12—1980 அன்று தீர்ப்பாகி இருக்கிறது.

(இ) இந்தத் தொகை 1976 ஆம் ஆண்டிலிருந்து பாக்கியாக உள்ளது.

1981 ஏப்ரல் 15]

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரியலூருக்கு அருகிலுள்ள நாகலூர் குவாரி தனியாருக்கு குத்தகை மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிக்ஸட் கம்பெனிக்கு. அந்தக் கம்பெனியிலிருந்து இன்றைக்கு கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு இரண்டாயிரம டன் கற்கள் டால்மியாபுரத்திற்கு எடுத்துச் செல்கிறார்கள். லாரிகளில் டிரெய்லர் போட்டு இருபது டன் ஏற்றுகிறார்கள் ஒரு லாரிக்கு. ஒரு நாளைக்கு நூறு டன் ஏற்றப்படுகிறது. 1,200 டன கொண்டு செல்கிறார்கள். ஒரு நாளைக்கு எவ்வளவு கொண்டு செல்லப்படுகிறது, அதற்கு செஸ் எவ்வளவு என்று நிர்ணயிக்க அங்கே அதிகாரியை வைத்து, எடைபோடும் மெஷினையும் வைப்பதற்கு இந்த அரசு உத்தேசித்திருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்ன இந்த நிறுவனதிதற்கு குத்தகை கொடுத்த காலம் 1975 இல், அதாவது 1977-க்கு முன்னாலே நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே, அவர்கள் எவ்வளவு எடுத்துச் செல்கிறார்கள் என்பதற்கெல்லாம் அங்கே அதற்கென்று ஒரு தாசில்தார் இருக்கிறார். அவர் அவற்றையெல்லாம் அங்கே சரிபார்த்து அரசுக்கு வர வேண்டிய பணத்தை வசூல் செய்வதற்கு இருந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1975-இல் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். யாரால் அது கொடுக்கப்பட்டது ? அந்த நேரத்தில் ஒன்றியம் இல்லை. யாரால் அந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது, என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். திருவாளர்கள் பிக்ஸட் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1975-ல் பொறுப்பில் இருந்தவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பிக்ஸட் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 1975-ல் ஒன்றியம் கலைக்கப்பட்ட நேரத்தில் யாரால் கொடுக்கப்பட்டது? அந்தத் தனி அதிகாரி யார்? எத்தனை ரூபாய்க்குக் கொடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு முதலிலேயே நான் பதில் சொன்னேன். யாரால் கொடுக்கப்பட்டது என்றால், அரசால் கொடுக்கப்பட்டது. எவ்வளவு ஏக்கர்கள் என்றும் சொல்லி இருக்கிறேன். அவர்கள் எவ்வளவு மதிப்புக்கு எடுக்கிறார்களோ அந்த அளவுக்கு அரசாங்கத்திற்கு தொகையைக் கொடுக்கிறார்கள்.

தேனி தொகுதியில் கூட்டுறவுத்துறையில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 705—திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தேனி சட்டப் பேரவைத் தொகுதியில் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஆய்வில் உள்ளது.

மின்சார பல்பு தயாரிக்கும் தொழிற்சாலை.

*வினா எண் 706—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் அரசாங்கம் சொந்தமாக மின்சார பல்பு தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கேள்விக்கு இடம் இல்லையென்று சொல்லுகிறார்கள். தற்பொழுது எல்லா மாவட்டங்களிலும், அந்தந்த மாவட்டத்தைப் பொறுத்து